

கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி. சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் ஆகியோர் நேற்று (28.10.2024) காவேரிப்பாக்கம் ஊராட்சி ஒன்றியம். பாணாவரம் இலங்கை தமிழர் மறுவாழ்வு மையத்தில் 96 பயனாளிகளுக்கு ரூ.5.53 கோடி மதிப்பீட்டில் புதிய குடியிருப்புகள் கட்டும் பணிக்கு அடிக்கல் நாட்டினார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர். ஜெ.யு. சந்திரகலா, , சோளிங்கர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம். முனிரத்தினம், மாவட்ட வருவாய் அலுவலர் ந. சுரேஷ், திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திருமதி.பா. ஜெயசுதா. ஒன்றியக் குழுத்தலைவர் திருமதி. அனிதா குப்புசாமி, மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் சக்தி. ஒன்றிய குழு துணைத்தலைவர் திருமதி. முனியம்மாள், ஊராட்சி மன்றத் தலைவர் அர்ஜுணன் மற்றும் பலர் உள்ளனர்.

கூட்டுறவு மற்றும் பொதுத்துறை

# சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களுக்கு மிகை ஊதியம் - கருணைத் தொகை!

## மொத்தம் 10 சதவிகித போனஸ் வழங்க - முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை. அக்.29-

**கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் பணிபுரியும் தொழிலாளர் மற்றும் பணியாளர் களுக்கு 2023-2024 ஆம் ஆண்டிற் கான மிகை ஊதியம் மற்றும் கருணைத் தொகை வழங்கிட, முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.**

இதுதொடர்பாக - சர்க்கரைத் துறை இயக்குநரின் அறிவிப்பு வருமாறு :

தமிழ்நாட்டில் 16 கூட்டுறவு மற்றும் 2 பொதுத்துறை சர்க்கரை ஆலைகள் உள்ளன. கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் பணிபுரிந்து வரும் தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவரும் எதிர்வரும் தீபாவளி பண்டிகையை மகிழ்ச்சியுடன் கொண்டாடும் வகையில் முதலமைச்சர் அவர்கள் 20232024 ஆம் ஆண்டிற்கான மிகை ஊதியம் மற்றும் கருணை தொகை வழங்க ஆணையிட்டுள்ளார்கள். அதன் அடிப்படையில் ஒதுக்கீட்டு உபரி உள்ள சுப்ரமணிய சிவா மற்றும் கள்ளக்குறிச்சி - II ஆகிய இரு கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கும் மிகை ஊதியமாக 8.33% மற்றும் கருணை;j தொகையாக 11.67% என மொத்தம் 20% போனஸ் வழங்கவும், மீதமுள்ள 14 கூட்டுறவு மற்றும் 2 பொதுத் துறை சர்க்கரை ஆலைகளுக்கு மிகை ஊதியமாக 8.33% மற்றும் கருணை தொகையாக 1.67% என மொத்தம் 10% போனஸ் வழங்கவும் ஆணையிட்டுள்ளார்கள்.

இதன் மூலம் தமிழ்நாட்டில் உள்ள 16 கூட்டுறவு மற்றும் 2 பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் பணிபுரியும் சுமார் 5775 தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்கள் பயன்பெறுவர். மேலும், மிகை ஊதியம் மற்றும் கருணை தொகை வழங்குவதால் ரூ.411.90 இலட்சங்கள் செலவினம் ஏற்படும்.

இவ்வாறு அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் மோடி ஆட்சியில் - நாடு முழுவதும்

# 9 மாதங்களில் 585 தாக்குதல் சம்பவங்கள்!

## டெல்லியில் கிறிஸ்தவர்கள் போராட்டம்!

புதுடெல்லி, அக். 29-

மோடி பிரதமரான பிறகு நாட்டில் கிறிஸ்தவர் மீதான தாக்குதல்கள் மிக மோசமான அளவில் அதிகரித்து வருகிறது. ஒரே வருடத்தில் நாடு முழுவதும் கிறிஸ்தவர்களுக்கு எதிராக 585 தாக்குதல்கள் நிகழ்ந்துள்ளன. இந்நிலையில், இந்த தாக்குதலை கண்டித்தும், மோடி அரசுக்கு எதிராகவும் தில்லி ஜந்தர் மந்தரில் சனியன்று பேரணியுடன் நாடு முழுவதிலும் இருந்து கிறிஸ்தவர்கள் போராட்டம் நடத்தினர். பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த திருச்சபை தலைவர்கள் போரட்டத்தில் கலந்து கொண்டனர். தில்லி பேராயர் அனில் குடோ, டாக்டர். பால் ஸ்வரூப், ரெவ். திமோதி, டாக்டர். மைக்கேல் வில்லியம்ஸ், மீனாட்சி சிங் உள்ளிட்டோர் பங்கேற்று உரையாற்றினர்.

**மோடி அரசுக்கு கண்டனம்!**

“மணிப்பூர் மாநிலத்தில் வன்முறையின் போது 200க்கும் மேற்பட்ட தேவாலயங்கள் அழிக்கப்பட்டன. மணிப்பூரைப் போலவே பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் கிறிஸ்தவர்கள் மீது தொடர் தாக்குதல் நடத்தப்பட்டு, கிறிஸ்தவர்களுக் கான அரசியல் சாசன உரிமைகள் பறிக்கப்படுகிறது. நாடு முழுவதும் ஒரே ஆண்டில் கிறிஸ்தவர்களுக்கு எதிராக 585 தாக்குதல் சம்ப வங்கள் பதிவாகியுள்ளன. மதமாற்றத் தடைச்சட்டங்கள் என்ற பெயரில் கிறிஸ்தவர்கள் வேட்டையாடப்படுகின்றனர். ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க. மற்றும் வி.எச்.பி. உள்ளிட்டவைகள் கிறிஸ்தவர்களின் செயல்பாடுகளை தடுக்க முயற்சிக்கிறது. நாட்டில் உள்ள கிறிஸ்தவர்க ளுக்கு பாதுகாப்பு மற்றும் நீதி இல்லாத சூழல் உள்ளது” என போராட்டத்தில் கிறிஸ்தவ தலைவர்கள் உரையாற்றினர்.

**மோடி பிரதமர் ஆன பின்பே தாக்குதல் அதிகரிப்பு!**

கிறிஸ்தவ தலைவர் ஏ.சி. மைக்கேல் கூறுகையில், “2014ஆம் ஆண்டு நரேந்திர மோடி பிரதமராக பதவியேற்ற நாளிலிருந்து இன்று வரை கிறிஸ்தவ சமூகத்திற்கு எதிரான வெறுப்பு குற்றங்கள் கடுமையாக அதிகரித்து வருகிறது. அதாவது 2014ஆம் ஆண்டுக்குப் பின் இந்த நாட்டில் வாழ்வது கடினமாகிவிட்டது என்பதை கிறிஸ்தவ சமூகம் உணர்ந்து விட்டது. 2014 இல் நாடு முழுவதும் கிறிஸ்தவர்கள் மீது 100க்கும் குறைவான அளவிலேயே தாக்குதல் சம்பவங்கள் நடந்துள்ளன. 2015இல் 200 தாக்குதல் சம்பவங்களும், 2016இல் 300 தாக்குதல் சம்பவங்களாக உயர்ந்தன. அதன் பின் 400, 500 என கிறிஸ்தவர்களுக்கு எதிரான தாக்குதல் சம்பவங்களின் எண்ணிக்கை மின்னல் வேகத்தில் அதிகரித்து, கடந்த 2023இல் 700க்கும் மேற்பட்ட தாக்குதல் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இது கிறிஸ்தவர்களுக்கு மட்டுமின்றி நாட்டுக்கு மிகவும் ஆபத்தான வளர்ச்சியாகும்” என அவர் கூறினார்.

**மாதத்திற்கு 61 தாக்குதல் சம்பவங்கள் : யு.சி.எப். தகவல்!**

யுனைடெட் கிறிஸ்டியன் போரம் (யுசிஎப்) தொகுத்த தரவுகளில், “2023 ஆம் ஆண்டில் கிறிஸ்தவர்களுக்கு எதிராக 733 வன்முறை சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதாவது சராசரியாக மாதத்திற்கு 61 தாக்குதல் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. அதே போல 2024 ஆம் ஆண்டின் ஜனவரி முதல் செப்டம்பர் வரை 9 மாதங்களில் 585 சம்பவங்கள் நடந்துள்ளன. இந்த தாக்குதல் அனைத்தும் கிறிஸ்தவர்கள் மற்றும் கிறிஸ்தவ நம்பிக்கையை கடைப்பிடிக்கும் மற்றவர்களை குறிவைத்து நிகழ்த்தப்பட்டதாகும். குறிப்பாக மணிப்பூரில் 200 தேவாலயங்கள் அழிக்கப்பட்டுள்ளது. தாக்குதல் தொடர்பாக பிரதமர், உள்துறை அமைச்சர் அமித் ஷா மற்றும் சிறுபான்மை ஆணையங்களுக்கு பல முறை மனுக்கள் அளித்தும் எந்த அர்த்தமுள்ள பதிலையும் இதுவரை அளிக்கவில்லை. மேலும் நடவடிக்கை தொடர் பாக சிறு வார்த்தைக் கூட பேசவில்லை” என அதில் கூறப்பட்டுள்ளது.

கூட்டணி உடையும் என்கிற எண்ணம் ஒருபோதும் வெற்றி பெறாது!

# கொள்கை அடிப்படையில் தி.மு.க.வை ஆதரிக்கிறோம்!

## “ஜனசக்தி” இதழில் - இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் “ஜூனியர் விகடனுக்கு” பதிலடி!

சென்னை, அக். 29-

கொள்கை அடிப்படையில் தி.மு.க.வை ஆதரிக்கிறோம். எங்கள் கூட்டணி உடையும் என்கிற எண்ணம் ஒருபோதும் வெற்றி பெறாது என்று ஜூனியர் விகடன் இதழில் வெளியான கட்டுரைக்கு பதிலளித்து, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் அவர்கள் ஜனசக்தி இதழில் குறிப்பிட்டுள்ளார்.



அவரது பதிலடி வருமாறு:-

‘ஆடு நனைவதைக் கண்டு ஓநாய் அழுததாம்’ என்று ஒரு பழமொழி உண்டு.

“இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தனது போராட்டக் குணங்களை இழந்து விட்டது. மக்கள் பிரச்சினைகள் எதுவானாலும் களத்தில் நின்று போராடும் கட்சி தற்போது போராடுவதில்லை. கண்டும் காணாமல் உள்ளது.”

வி.சி.க.வின் “மது ஒழிப்பு மாநாட்டில் தொடங்கி, சாம்சங் நிறுவனம் போராட்டம் வரையில் தி.மு.க.வின் பிரச்சாரப் பிரிவுகளாகவே கூட்டணிக் கட்சி தலைவர்கள் மாறிப் போய் விட்டார்கள் எனப் புலம்பித் தீர்க்கிறார்கள் தி.மு.க. உறவாய் இருக்கும் கூட்டணிக் கட்சிகளின் இரண்டாம் கட்ட நிர்வாகிகள். என்னதான் நடக்கிறது தி.மு.க. கூட்டணிக்குள்?” என்கிற வினாவுடன் விரிவான கட்டுரை வெளியிடப்பட்டுள்ளது.

ஒன்றை ஐந்து பக்கங்களுக்குக் குறையாது 20.10.2024 தேதியிட்ட ஜூனியர் விகடன் வார இதழ் வெளியிட்டுள்ளது.

இந்த இதழ் மட்டுமல்ல, வேறு சில தின மற்றும் வார ஏடுகளும் இதுபோன்ற விமர்சனங்களையும், உபதேசங்களையும் வாரி வழங்கி வருகின்றன.

இத்தகைய உபதேசங்கள் உள்நோக்கமுடையன. கட்சித் தலைமைக்கும், அணிகளுக்கும் இடையே முரண்பாட்டை உருவாக்கிக் குளிர்காய விரும்பு கின்றன. இத்தகைய ஏடுகளுக்கு என ஓர் அரசியல் உள்ளது. அது என்ன அரசியல் என்பதனை வெளிப்படுத்திட மாட்டார்கள். அத்தகைய துணிச்சல் அவர்களுக்குக் கிடையாது.

**புழுதிவாரி இறைப்பர்!**

தங்களது ஏடுகள், ஒரு நடுநிலை தவறா நல்ஏடு என்று பறைசாற்றிக் கொள்வார்கள். ஆனால் வெளியே தெரியாமல் ஒரு சார்பு நிலை அரசியலை மேற்கொள்வார்கள். அவர்களது அரசியல் வெற்றி பெற வேண்டும் என்பதற்காக பிறர் மீது புழுதிவாரி இறைப்பார்கள்.

ஒன்றியத்தில் இருக்கும் ஆட்சி கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக மேற்கொள்ளும் கொள்கை என்ன? யாருடைய நலன்களுக்காக அவர்கள் ஆட்சி நடத்துகின்றார்கள்? மக்களுக்கான ஆட்சியா? அல்லது விரல் விட்டு எண்ணக்கூடிய நபர்களான அம்பானி, அதானி இத்தியாதிகளுக்கான ஆட்சியா? யார் நலன் பாதுகாக்கப்படுகின்றது? யார் நலன் புறக்கணிக்கப்படுகிறது?.

எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களை புறக்கணிப்பார்கள். அம்மாநில மக்கள் இயற்கை சீற்றத்தால் பாதிக்கப்படும் போது அதனை கண்டு ரசிப்பார்கள். தங்களது கட்சி ஆட்சி புரியும் அல்லது தங்களை ஆதரிக்கும் கட்சி ஆளும் மாநிலங்களுக்கு நிதியை வாரி வாரி வழங்குவார்கள்.

இந்திக்கும், சமஸ்கிருத மொழியின் வளர்ச்சிக்கும் அள்ளி, அள்ளிக் கொடுப்பார்கள். தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு போன்ற மொழிகளுக்கு கிள்ளிக் கொடுப்பார்கள்.

இரு மொழிக் கொள்கையை ஏற்று அமல்படுத்தி வரும் தமிழ்நாட்டில், மும்மொழிக் கொள்கையை ஏற்றுக் கொண்டால்தான் உனக்கு நிதி கொடுப்பேன். இல்லையென்றால் கொடுக்க மாட்டேன். கொடுக்க முடியாது. எங்கள் கொள்கையை ஏற்று கையெழுத்து போடுகிறாயா? இல்லையா என்று பகிரங்கமாக ஒன்றிய அமைச்சர் அறிக்கை வெளியிடுகிறார். வெளியிட்டது மட்டுமல்ல, தமிழ்நாட்டு ஆட்சியர்களுக்கு, பணியாளர்களுக்கு சம்பளம் போட முடியாமல் பட்டினிக்குத் தள்ளுகிறார்.

**பகிரங்க வன்முறை!**

மாநில அரசு பொறுப்பேற்று தன்னுடைய நிதியிலிருந்து, நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டிய கட்டாய நிலைக்கு உள்ளாக்குகிறார்.

மதத்தின் பேராலும், சாதியின் பேராலும் நாட்டு மக்களை பிளவுபடுத்துகிறார்கள். ஆர்.எஸ்.எஸ் தலைவர் மோகன் பகவத் பகிரங்கமாக வன்முறையைத் தூண்டுகிறார்.

இவைகள் எல்லாம் எங்களுக்கு உபதேசம் செய்யும் ஏடுகளுக்கும், நபர்களுக்கும் தெரியவில்லையா? அல்லது தெரியாதது போன்று நடிக்கின்றார்களா? உண்மையில் தூங்குகிறவனை எழுப்பி விடலாம். தூங்குவது போல் நடிப்பவர்களை ஒருபோதும் எழுப்பிட இயலாது.

வகுப்பு வாதத்திற்கு எதிரான போராட்டத்தில், பாசிசத்திற்கு எதிரான போராட்டத்தில், ஜனநாயகத்திற்கான போராட்டத்தில், மாநில உரிமைகளுக்கான போராட்டத்தில், மதச்சார்பின்மைக்கான போராட்டத்தில், தி.மு.க. தலைமை வழுவாமல் போராடுகிறது.

ஆகவே, கொள்கை அடிப்படையில் தி.மு.க.வை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஆதரிக்கிறது. இது தொடரும்,

**சிண்டு முடிகிற வேலை!**

பா.ஜ.க.வை எதிர்த்து தமிழ்நாட்டில் காலூன்ற முடியாமல் தடுக்கிற வலுவான கூட்டணி இனியும் தொடர்வதை எஜமானர்கள் விரும்பவில்லை. எனவே, அந்தக் கூட்டணி உடைந்து சிதறப் போகிறது என்ற புதிய தோற்றத்தை உருவாக்கக் கடும் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. எனவே, இந்த இரண்டு நிகழ்வுகள் மீது ஊடகங்கள் அதிக வெளிச்சத்தைப் பாய்ச்சுகின்றன. சிண்டு முடிகிற வேலையை செய்து பார்த்தவர்கள். தோற்றுப் போன கோபத்தில் புழுதி வாரி இறைக்கிறார்கள். இவர்களின் நோக்கம் தி.மு.க. தலைமையிலான கூட்டணி உடைந்து, சுக்கு நூறாக வேண்டும் என்பதாகும்.

அவ்வாறு ஏற்பட்டால் தங்களின் அரசியல் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளலாம் என்கிற நப்பாசையுடன், நாக்கைத் தொங்க போட்டுக் கொண்டு அலையும் கூட்டமே!

உங்களின் குள்ளநரி தந்திரங்கள், கொள்கை உடையவரிடம் ஒருபோதும் வெற்றி பெறாது என்பது இன்று, நேற்று அல்ல, காலங்காலமாக உணர்த்திய பேருண்மை என்பதை மறந்து விட வேண்டாம்.

இவ்வாறு இந்திய கம்யூனிஸ்ட் தமிழ் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு அரசு “பாதம் பாதுகாப்போம் திட்டத்தின்” கீழ்

# ‘பாத மருத்துவ மையங்கள்’ அமைக்க அரசாணை வெளியீடு!

## 80 லட்சம் நீரிழிவு நோயாளிகளை பாதப் பரிசோதனைக்கு உட்படுத்த இலக்கு நிர்ணயம்!

சென்னை, அக்.29-

தமிழ்நாடு அரசு “பாதம் பாதுகாப்போம் திட்டத்தின்” கீழ் பாத மருத்துவ மையங்கள் அமைக்க அரசாணை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக அரசு செய்தி வெளியீடு வருமாறு:-

நீரிழிவு நோயாளிகளின் மருத்துவ சேவைகளை மேம்படுத்தும் தமிழ்நாடு அரசின் தொலைநோக்கு பார்வை பயணத்தில் “பாதம் பாதுகாப்போம் திட்டம்” அரசின் ஒரு முன்னோடித் திட்டமாகும். இத்திட்டத்தினை அரசு மருத்துவமனைகளில் நடைமுறைப் படுத்துவதற்கான அரசாணை நேற்று வெளியிடப்பட்டுள்ளது.

இத்திட்டம் நீரிழிவு நோய் பாத பாதிப்புகளை தவிர்ப்பதற்கும் நீரிழிவு பாத பாதிப்புகளுக்கான மருத்துவத்தின் மூலமாக, கால் இழப்புகள் ஏற்படுவதைத் தடுப்பதற்கும் வழிவகை செய்கிறது. தமிழ்நாடு அரசின் முன்னோடி திட்டமாகிய “மக்களைத் தேடி மருத்துவம்” நோய்களைத் தடுப்பதிலும் சிகிச்சையளிப்பதிலும் முக்கியப் பங்காற்றுகிறது.

மாநிலத்தின் முதன்மையான ‘மக்களைத் தேடி மருத்துவம்’ திட்டத்தின் கீழ் இத்திட்டம் கட்டமைக்கப்பட்டு ஒருங்கிணைந்த பாத மருத்துவ சேவைகளை 36 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மூலமாக வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. நாட்டிலேயே இது போன்ற முன்னெடுப்பை அரசு மேற்கொள்வது இதுவே முதல் முறையாகும்.

பத்து கோடிக்கும் அதிகமான நோயாளிகள் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டு உள்ள இந்தியாவில் 25 சதவிகிதத்தினர் பாத பாதிப்புகளால் அவதியுறுவதும், இவர்களில் 85 சதவிகிதத்தினர் கால்களை இழக்க நேரிடுவதும் ஒரு தேசியப் பேரிடர் ஆகும்.

தமிழ்நாட்டில் 80 லட்சம் மக்கள் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டு உள்ளார்கள். நீரிழிவு பாத பாதிப்புகள் ஆரம்ப நிலையில் கண்டறியப் படாவிடில் ஆபத்தான பின்விளைவுகளும், கிருமி தொற்று மற்றும் கால்களை இழக்கும் அபாயமும் நேரிடுகிறது. 85 சதவிகித நீரிழிவு தொடர்பான கால் அகற்றல்கள் (Amputations) காலத்தே கண்டறியப்பட்ட நோய் அறிகுறிகள் மற்றும் இடையீட்டுகளின் மூலம் முற்றிலும் தவிர்க்கக்கூடியவை ஆகும்.

பெருகி வரும் இப்பிரச்சினையின் தீவிர தன்மையைக் கண்டறிந்து இதைக் களைவதற்கான முன்னெடுப்பாக ‘பாதம் பாதுகாப்போம்’ திட்டம் தமிழ்நாடு அரசால் அறிமுகப்படுத்தப்படுகிறது. இதன் மூலம் 80 லட்சம் நீரிழிவு நோயாளிகள் பாத பரிசோதனைக்கு உட்படுத்த இலக்கு நிர்ணயித்து திட்டமிடப்பட்டுள்ளது. நீரிழிவு நோயாளிகளுக்கு ஏற்படும் பாத உணர்விழப்பு மற்றும் இரத்த நாள அடைப்புகளை கண்டறிந்து மருத்துவ நெறிமுறைகள் அடிப்படையிலான ஆரம்ப நிலை இடையீட்டுகளை மேற்கொண்டு கால் இழப்புகளை தடுத்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

“பாதம் பாதுகாப்போம் திட்டம்” நீரிழிவு பாத மருத்துவத்தின் அனைத்து அம்சங்களையும் ஒருங்கிணைத்து தேவையற்ற கால் இழப்புகளை தடுத்து நீரிழிவு நோயாளிகளின் வாழ்க்கை தரத்தை உயர்த்திட விழைகிறது. எந்த ஒரு நீரிழிவு நோயாளியும் பாதிக்கப்படக்கூடாது என்பதே இத்திட்டத்தின் நோக்கம்.

தமிழ்நாடு அரசு இத்திட்டத்திற்கென ரூ.26.62 கோடி நிதி ஒதுக்கீடு செய்து 2336 ஆரம்ப சுகாதார நிலையங்கள், 299 அரசு மருத்துவமனைகள் மற்றும் 36 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் பாத பாதிப்பு கண்டறிதல் மையங்களை நிறுவ உள்ளது. மேலும் 100 அரசு மருத்துவமனைகள், 21 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் நிறுவப்படும் பாத மருத்துவ மையங்கள் மற்றும் 15 மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளில் நீரிழிவு பாத அறுவை சிகிச்சைகள் மேற்கொள்வதற்கான வசதிகளை நிறுவுவதன் மூலமாகவும் இத்திட்டம் பாத பராமரிப்பு, கால் புண் தவிர்த்தல், கால் புண் மருத்துவம், நீரிழிவு பாத அறுவை சிகிச்சைகள் மற்றும் புனர்வாழ்வு அம்சங்களையும் ஒருங்கிணைக்கின்றது.

இத்திட்டம் தஞ்சாவூர் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முன்மாதிரி திட்டத்தினுடைய பலன்களின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டுள்ளது. தஞ்சாவூர் மாவட்டத்தில் 1.68 லட்சம் நீரிழிவு நோயாளிகளில் 1.65 லட்சம் நபர்களுக்கு பாத பாதிப்பு கண்டறிதல் மேற்கொள்ளப்பட்டது. தஞ்சாவூர் மாவட்ட மாதிரி வெற்றியை தொடர்ந்து மாநில முழுமைக்கும் இத்திட்டம் விரிபடுத்தப்படவுள்ளது.

இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கு தமிழ்நாடு அரசு கோவை கங்கா மருத்துவமனையோடு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டு நீரிழிவு பாத அறுவை மருத்துவம், கால் புண் மருத்துவம் மற்றும் புனரமைப்பு தளங்களில் மேம்பட்ட சேவைகளை வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த முன்னெடுப்பு அரசு மருத்துவக்கல்லூரிகளில் பொது அறுவைதுறை, ஒட்டுறுப்பு அறுவை துறை மற்றும் இரத்தநாள அறுவை துறைகளின் ஒருங்கிணைப்பில் தடையற்ற சேவைகளை வழங்க வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டுள்ளது.

பாத மருத்துவ மையங்களை அரசு மருத்துவத்தின் முக்கியமான சேவைகளாக உருவகப்படுத்துவதன் மூலம் மிக எளிய தரப்பினரையும் பாத மருத்துவ சேவைகள் சென்றடைவதை உறுதி செய்வதோடு, எந்த ஒரு நீரிழிவு நோயாளியும் பாத மருத்துவ தீவிர கவன சிகிச்சையின்றி தவிக்கும் நிலை இருக்கக்கூடாது என்பதையும் அரசு உறுதிசெய்கிறது.

அரசு இதற்கான தொடர் பயிற்சியை மருத்துவ பணியாளர்களுக்கு வழங்கிடவும் திறன் மேம்பாட்டினை உறுதி செய்வதன் மூலமாக தொலைநோக்கில் இத்திட்டம் வெற்றி பெறுவதை இலக்காகக் கொண்டுள்ளது.

பாதம் பாதுகாப்போம் திட்டம் அரசால் மேற்கொள்ளப்படும் ஒரு திட்டம் என்பதையும் தாண்டி, நீரிழிவு நோயாளிகளின் நலத்தை பேணிகாப்பதை தொலைநோக்கு பார்வையோடு அரசு முன்னெடுக்கிறது.

ஆரம்ப நிலை கண்டறிதல், ஒருங்கிணைந்த சேவைகள் மற்றும் காலத்திலான இடையீட்டுகள் மூலமாக பல லட்சம் மக்களின் வாழ்க்கை தரத்தை மாற்றியமைக்கின்ற வல்லமையை இத்திட்டம் தன்னகத்தே கொண்டுள்ளது. கால் இழப்புகளை தடுப்பதும் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதும் இந்திய நாட்டில் நீரிழிவு என்னும் பேரிடரை எதிர் கொள்வதில் மிக முக்கிய மைல் கல் ஆகும்.

“பாத மருத்துவம்” அனைத்து தரப்பு மக்களுக்கும் எளிதில் கிடைக்கக்கூடிய ஒன்றாகவும் திறன் மிக்க ஒன்றாகவும் அமைவதை பாதம் பாதுகாப்போம் திட்டம் உறுதி செய்து தேசிய அளவிலும் உலக அளவிலும் தமிழ்நாடு நீரிழிவு மருத்துவத்தில் ஒரு புதிய உச்சத்தை எட்டுவதில் அரசு உறுதி பூண்டுள்ளது.

இவ்வாறு அச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



திருவள்ளூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திருவள்ளூர் ஜெ.என்.சாலையில் உள்ள மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முன்பு சட்ட உறுப்பினர் மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ. 25 லட்சம் மதிப்பில் கட்டி முடிக்கப்பட்ட பேருந்து நிழற்குடை மற்றும் பெரியகுப்பத்தில் உள்ள நகராட்சி நடுநிலைப் பள்ளியில் ரூ.20 லட்சம் மதிப்பில் கட்டி முடிக்கப்பட்ட புதிய வகுப்பறைகள் திருவள்ளூர் சட்ட மன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் தலைமை தாங்கி பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். உடன் நகர மன்றத் தலைவர் உதயமலர் பாண்டியன், துணைத் தலைவர் சி.சு.ரவிச்சந்திரன், ஆணையர் ஏ.திருநாவுக்கரசு, கே.திராவிடபக்தன், பொன்பாண்டியன், வி.எஸ்.நேதாஜி, சி.சு. விஜயகுமார், தி.ஆ.கமலக்கண்ணன், டி.எம்.ரவி, ராஜேஸ்வரி கைலாசம், சீனிவாசன், டினேஷ்சீனிவாசன், டி.சிவக்குமார், நகரமன்ற உறுப்பினர்கள் நீலாவதி பன்னீர்செல்வம், பிரபாகரன், சாந்தி கோபி, அயூப் அலி, டி.கே.பாபு, தாமஸ், பத்மாவதி ஸ்ரீதர், வி.இ.ஜான், டி.செல்வகுமார், சீனிவாசன், ஹேமலதா நரேஷ், விஜயகுமார், தனலட்சுமி ஜெய்கிருஷ்ணா, அ.பவானவண்ணன், பாலச்சந்தர், பாலகிருஷ்ணன், ராஜி, வீனஸ், பாண்டியன், உலகநாதன், முரளி, சுனில், சுரேஷ், தினகரன், மனோகரன், சித்திரை, ருக்குமாங்கதன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



கடலூர் அரசு மகளிர் தொழிற்பயிற்சி நிலையத்தில் 2024 ஆம் ஆண்டிற்கான பட்டமளிப்பு விழா நடைபெற்றது. இவ்விழாவில் கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.அய்யப்பன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாணவர்களுக்கு பட்டம் வழங்கி பயிற்சியாளர்களுக்கு பரிசுகள் வழங்கினார். மேலும் கோ.அய்யப்பன் எம்.எல்.ஏ தனது சொந்த நிதி ஒரு லட்சம் ரூபாய் கல்லூரிக்கு வைப்பு நிதியாக வழங்கினார். நிலைய மேலாண்மைக்குழு தலைவர் சத்தியநாதன் சிறப்புரை ஆற்றினார். விழாவில் அரசு கடலூர் மகளிர் தொழிற்பயிற்சி நிலைய முதல்வர் தலைமை தாங்கினார். நிர்வாக அலுவலர் கமலக்கண்ணன் வாழ்த்துரை வழங்கினர். இதில் ரேணுகாதேவி, சித்ரா, நிலைய பணியாளர்கள், பயிற்சியாளர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி சட்டமன்ற தொகுதியை சேர்ந்த மாற்றுத்திறனாளிகள் 50 பேர் வீட்டுமனை பட்டா மற்றும் கலைஞர் கனவு இல்லம் கோரிக்கைகளை வைத்திருந்தனர் அக்கோரிக்கைகள் நிறைவேறியதை அடுத்து தமிழ்நாடு முதல்வருக்கும் தமிழ்நாடு துணை முதல்வருக்கும், திருவள்ளூர் மேற்கு மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏவுக்கு நேரில் சென்று நன்றி தெரிவித்தனர்கள். உடன் ஆனந்தி செங்குட்டுவன், பா.சம்பத், வி.ஜி.மோகன், மோனிஷா சரவணன் உள்பட பலர் உள்ளனர்